வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 54 /2022

வழக்கு சாட்சி LW10/ PW8

| பெயர் | ராஜ்குமார் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | கஜேந்திரன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 48 |

தேதி 24.07.2025

எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u>

நான் மாதவரம் பகுதியில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையொப்பமானது அ.த.சா.ஆ. 4 குறியீடுச்செய்யப்படுகிறது. மேற்படி கையொப்பமானது குணசேகரனிடம் சர்வலிங்கம் சீட்டுப் பணம் முதலீடுச்செய்து அதை அவர் தராத்தால் இருவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு மாதவரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதில் என்னை அழைத்து சாட்சி கையொப்பம் செய்ய சொன்னார்கள். நான் மேற்படி கையொப்பத்தினை செய்துக் கொடுத்தேன். நான் கையொப்பம் செய்யும் போது குணசேகரன் இருந்தார். போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் சம்பவத்தின் போது டெப்கோ கம்பெனியிலும், தற்போது வேறு கம்பெனியிலும் வேலைப் பார்க்கிறேன். நான் சர்வலிங்கத்துடன் வேலைப் பார்க்கிறேன். நான் சர்வலிங்கம் குணசேகரனிடம் பணம் கொடுப்பதை பார்த்தேனா என்றால் பார்த்தேன். எதற்காக என்று தெரியுமா என்றால் சீட்டுப் பணம் என சர்வலிங்கம் கூறினார். சர்வலிங்கம் என்னை குணசேகரன் ஏலம் விடும்போது நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சர்வலிங்கம் கூறி தான் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். ஆனால் சீட்டுப்பணம் கொடுப்பது தெரியும். குணசேகரனுக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் ஆமாம்.

ஆனால் குணசேகரனை எனக்குத் தெரியும். சர்வலிங்கம் கூறிதான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.